காட்டுகிறார்கள். அதுபோன்று கொஞ்சம் மாணவர்கள் செல்கிறார்கள். அப்படி இருந்தாலும்கூட, அரசுப் பள்ளிகளில் படிக்கக்கூடிய பிள்ளையினுடைய சேர்க்கை வருடத்திற்கு வருடம் கூடிக்கொண்டுதான் இருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, எந்த விதத்திலும் அது குறையவில்லை. அதேபோன்று, கூடுதலான ஆசிரியர்களையும் அம்மா அவர்கள் நியமித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள்.

அதேபோன்று, பழங்குடியின மாணவர்களுக்கு rain coat மற்றும் கம்பளி ஆடைகள் எல்லாம் முன்கூட்டியே வழங்கிக் கொண்டிருக்கிறோம். மாண்புமிகு அம்மா அவர்களின் 14 வகையான நலத் திட்டங்களிலே கம்பளி சட்டைகளையெல்லாம் மலைப் பிரதேசங்களில் வழங்கிக் கொண்டுதான் இருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் பள்ளிக் கல்வித் துறைக்காக பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களை, இதுவரை வரலாற்றிலே எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்குக் கல்வியில் பல்வேறு ஆக்கபூர்வமான திட்டங்களைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் சுருக்கமாக உங்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்து அமைகின்றேன்.

7. அறிக்கை அளித்தல்

பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: குழுக்களின் அறிக்கை அளித்தல். பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி, பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் தலைவர் அவர்கள்.

திரு. ஆர். சின்னசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மறுபடியும் வெல்லும் என்பதற்கேற்ப சதி, சூழ்ச்சி அத்தனையையும் தூள், தூளாக்கி 5-வது முறையாக தமிழகத்தினுடைய முதலமைச்சராகப் பொறுப்பேற்று, பல்வேறு திட்டங்களை இங்கே மக்களுக்கு அறிவித்துக்கொண்டிருக்கிற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2014-2015 ஆம் ஆண்டிற்கான பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் ஆறாவது அறிக்கையை இம்மாமன்றத்திற்கு அளிக்கிறேன்.